# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1923 - 2015 ජූලි මස 10 වැනි සිකුරාදා - 2015.07.10

*1923 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1000 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1005 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1008 |


**கவனிக்க .-** *அரசியலமைப்புக்கான பத்தொன்பதாம் திருத்தச் சட்டமூலம் 2015, மாச்சு மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, யூலை மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## குண்டசாலை பிரதேச சபை

மத்திய மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்

குண்டசாலை பிரதேச சபையில் வெற்றிடமாயுள்ள கீழே காணப்படும் பதவிகளுக்கு தகுதியுடைய குண்டசாலை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிலையான வதிவிடவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிள்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும் | சம்பள அளவுத்திட்டம் | நியமனம் செய்தல் |
|---|---|---|---|---|---|
| 1 | பாதைத் தொழி லாளர்கள் | 04 | குறைந்தபட்சம் 8 ஆம் தரம் 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும் | PL -1-2006 A ரூ, 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | வாய் மூலப் பரீட்சை |
| 2 | நூலக உதவியாளர் | 02 | க. பொ. த. (சா./தர) பரீட்சையில் அல்லது தேசிய க. பொ. த. (சா/தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஏதாவது 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். | PL -1-2006 A ரூ, 11,730-10×120-10×130-10×145-12×160-ரூ. 17,600 | வாய் மூலப் பரீட்சை |

**1. நியமனம் செய்யும் பொது நிபந்தனைகள்.-**

(1) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்திற்கு18 வயதிற்கு குறையாதும் 45 வயதிற்கு மேற்படாதும் இருக்க வேண்டும். தற்போது அரச சேவையில் நிலையான பதவியில் இருப்பவர்களுக்கு ஆகக் கூடிய வயதெல்லை பொருத்தமற்றதாகும்.

(3) மத்திய மாகாணத்தில் 3 வருடங்களுக்கு நிலையான வதிவிடவாளராக இருக்க வேண்டும். (வாக்காளர் இடாப்பில் பெயர் பட்டியலின் படி அல்லது பிரதேச செயளாளர் அவர்களால் வழங்கப்படும் சான்றிதழின் மூலம் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(4) குண்டசாலை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் நிலையான வதிவாளர்களுக்கு மேலான முன்னுரிமை வழங்கப்படும்.

(5) நல்ல ஒழுக்கமுடைய நல்ல சுகதேகியாக இருக்க வேண்டும்.

(6) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றமொன்றில் தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.

(7) அரச சேவையில் அல்லது உள்ளூராட்சி சேவையிலிருந்து இடைநிறுத்தப்படாதவராக இருக்க வேண்டும்.

(8) பொது நிர்வாக சுற்று நிருப இலக்கம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருக்கக் கூடாது.

(9) தற்போது குண்டசாலை பிரதேச சபையில் சமயோசித, நாளாந்த, தற்காலிக, ஒப்பந்த, தொண்டர் நிலையான அடிப்படையில் சேவையிலீடுபட்டவர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படும்.

(10) விண்ணப்பம் கோரப்பட்ட அல்லது கோரப்படும் காலத்தில் மத்திய மாகாணத்தில் இப்பதவிக்கு புதிய நியமனம் செய்யும் ஒழுங்கு விதிகள் திருத்தப்படுதல், யாப்புகள் சேர்த்துக்கொள்ளப்படுதல், நியமனங்களை காலதாமதமாக்குதல், மாற்றுதல், இந்த அறிவித்தலை இரத்து செய்தல் அல்லது திருத்துதல் போன்றவைக்கான அதிகாரம் குண்டசாலை பிரதேச சபை செயலாளருக்குரிய தாகும்.

**2. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

(1) இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும். மூன்றுவருட தகுதிகாண் காலத்திற்குட்பட்டது. நிரந்தர ஊழியர்கள் 1 வருட கால சேவை பதில் அடிப்படை காலத்திற்குட்படுவர்.

(2) விதவைகள் அநாதைகள் ஓய்வூதியக் கொடுப்பனவிற்கு தகுதிகாண் வேண்டும்.

(3) அரச கரும மொழிக் கொள்கைக்குட்படல் வேண்டும்.

(4) இந்த நியமன நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் நிபந்தனைகளுக்கும் /அரச நிதிப் பிரமாணங்களுக்கும்/ அரசின் திணைக்கள கட்டளைகளுக்கும்/ மத்திய மாகாண சபையின் அல்லது குண்டசாலை பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் நிபந்தனைகளுக்கும் ஏற்ப நடவடிக்கை எடுப்பதற்கு கட்டுப்பட வேண்டும்.

3. தகுதியுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் கீழே காணப்படும் ஆவணங்களின் நகல் பிரதிகள் இணைத்து அனுப்பப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;
(4) வதிவிடம் பற்றிய பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(5) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தை சான்றிதழ் ;
(6) அனுபவம் பற்றிய சான்றிதழ் ;
(7) வேறு தகுதிகள் பற்றிய சான்றிதழ்கள்.

4. தொழில் தகவல்களுடன் முழுமையான சுய விபரங்கள் அடங்கிய கீழே காணப்படும் விதத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை சம்பந்தப்பட்ட சகல சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2015.07.20 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு கீழே காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலின் மூலமோ அல்லது நேரிலோ கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.

5. விண்ணப்பப்படிவத்தினை உறையிலிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும்.

6. தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை நிறுவனத்தலைவரின் சிபாரிசுடன் அனுப்ப வேண்டும்.

7. குறிப்பிடப்பட்ட தினத்திற்கு பிறகு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஜீ. யூ. குணசிங்ஹ,
செயலாளர்,
குண்டசாலை பிரதேச சபை.

குண்டசாலை பிரதேச சபை அலுவலகம்,
மெனிக்கின்ன,
2015, யூன் 24.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**குண்டசாலை பிரதேச சபை**

................................. பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்குரிய பெயர் :----.
2. நிரந்தர விலாசம் :----.
3. பிறந்த திகதி :- ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
4. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |
5. ஆணா/பெண்ணா :----.
6. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |
7. திருமணமானவர்/ஆகாதவர் :----.
8. கல்வித் தகைமை :----.
   8.1 விண்ணப்பதாரர் இறுதியாக சித்தியடைந்த வகுப்பு :- சிங்களம் :-----,
   தமிழ் :-----.
   8.2 க. பொ. த. (சா./தரப்) பரீட்சை :
   (i) வருடம் :----. மாதம் :----.
   (ii) பரீட்சை சுட்டெண் :----.
   (iii) பெறுபேறு :----.

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

8.3 க. பொ. த. (உயர் தரப்) பரீட்சை :
(i) வருடம் :----. மாதம் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

9. தொழில் தகைமையும் அனுபவமும் :----.
10. வேறு தகைமைகள் :----.
11. நீங்கள் எப்போதாவது குற்றமொன்றிற்காக நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? :----.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உண்மையானதும், சரியானதுமெனத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நியமனங்கள் சம்பந்தமான நிபந்தனைகளுக்கேற்ப என்னால் பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதென்று தெரியவரின் நியமிக்கப்படுவதற்கு முன்பு தகுதியற்றவனாவேன் எனவும் நியமனம் கிடைத்ததன் பின் தெரியவரின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(அரச சேவையில்/மாகாண அரச சேவையில்/அரச கூட்டுத்தாபனம்/சட்டரீதியான சபைகளில் சேவையிலீடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்காக மட்டும்)

இந்த நிறுவனத்தில் ...................... பதவி வகிக்கும் ......................... அவர்களின் விண்ணப்பத்தினை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரது சேவை திருப்திகரமானதென்றும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லையென்றும், அதுபற்றி நடவடிக்கை எடுப்பதற்கு எண்ணப்படவில்லையென்றும் உறுதிப்படுத்துகின்றேன் அவர் இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் தற்போது உள்ள சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் உறுதி கூறுகின்றேன்.

-----,
திணைக்களத்தலைவரின் கையொப்பமும்/
பதவி முத்திரையும்.

திகதி :----.

*7-444*

---

**வத்தளை பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையின் வத்தளை பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள நிலவுகின்ற இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் பொருட்டு தகைமைகளுள்ள மேல் மாகாணத்திற்குள் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| 1. | வருமான வரிப் பரிசோதகர் | எம்என் 1-2006ஏ<br>ரூபா 13,120-10×145-11×170-10×240-10×320-ரூபா 22,040 | **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக :**<br>(அ) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் வேறு 2 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|
| | | | க. பொ. த. (உ.த) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு (01) பாடத்தில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 2. | ஆயுர்வேத மருந்து கலக்குநர் | பீஎல் 2-2006ஏ ரூபா 12,210-10×130-10×145-10×160-12×170-ரூபா 18,600 | க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆகக்குறைந்தது ஏதேனும் இரண்டு (2) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்);<br><br>அத்துடன்<br><br>அரசாங்க ஆயுர்வேத வைத்தியசாலையில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆயுர்வேத மருந்துச்சாலையில் இத்துறையில் ஒரு வருடத்திற்குக் குறையாத சேவை அனுபவம் இருத்தல் வேண்டும். |

**வருமான வரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்.**-விவேக மற்றும் புலமை பரீசித்தல்/பொது அறிவைக் கொண்ட எழுத்துமூல பரீட்சையின் மூலம்.

**ஆயுர்வேத மருந்து கலக்குநர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளும் விதம்.**-ஒரு கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் மூலம்.

**ஆட்சேர்ப்பிற்கான பொது நிபந்தனைகள்-**

* விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரிகள் சிறந்த நடத்தையும் நல்ல தேகாரோக்கியமுடையவராகவுமிருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரிகள் மேல் மாகாணத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருட நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

* **வருமான வரிப் பரிசோதகர் பதவிக்கான வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியன்று 18 வயதிற்கும் 30 வயதிற்குமிடையில் இருத்தல் வேண்டும்.

  **ஆயுர்வேத மருந்து கலக்குநர் பதவிக்கான வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதியன்று 18 வயதிற்கும் 45 வயதிற்குமிடையில் இருத்தல் வேண்டும்.

* தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் நீதிமன்றில் தண்டனை பெற்றவராகவோ அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து விலக்கப்பட்டவராகவோ அல்லது பொது நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன்கீழ் ஒய்வுபெற்றவராகவோ இருக்கக்கூடாது.

**சேவை நியதிகள்.-**

* இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;
* இப்பதவிக்கு நியமனம்பெற்றோர் 3 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவராவர் ;
* விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செலுத்துதல் வேண்டும்;
* தகுதிகாண் காலப்பகுதியில் வரவு, வேலை மற்றும் நடத்தை திருப்திகரமாக இருப்பின், தகுதிகாண் காலப் பகுதியின் இறுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்படுவார்கள் ;
* இவ்வாட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் நியதிகளுக்கும் அமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கட்டளைகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் விடுக்கப்படும் ஏனைய ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் பிரதேச சபையினால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரமும் செயற்படுவதற்கு கட்டுப்பட்டவராவர்.

**விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டிய சான்றிதழ்களின் பிரதிகள் :**

* பிறப்புச் சான்றிதழ் ;
* கல்விச் சான்றிதழ் ;

* தேசிய ஆள் அடையாள அட்டை;
* பிரதேச செயலாளரின் சுருக்க கையெழுத்துடன் பிரதேசத்தின் கிராம அலுவலரிடமிருந்து பெறப்பட்ட நிரந்தர வதிவை நிரூபிக்கும் சான்றிதழ் ;
* அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (இவற்றில் ஒன்று கிராம அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்.)
* ஏனைய தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்.

**விண்ணப்பிக்கும் விதம்.-**

* விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய 12" × 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 20.07.2015 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "செயலாளர், வத்தளை பிரதேச சபை, 'வர்த்தக கட்டிடத்தொகுதி' கெரவலப்பிட்டி, ஹெந்தளை, வத்தளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் ;
* விண்ணப்பம் தாங்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய பதவியை குறிப்பிடுதல் வேண்டும் ;
* ஏலவே அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் அனுப்புதல் வேண்டும் ;
* நேரடியாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாதென்பதுடன், தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கவனிக்க வேண்டியது.-** விண்ணப்பப்படிவங்களை கோரியதன் பின்னர் அல்லது கோரும் காலப்பகுதிக்கிடையில் ஆட்சேர்ப்பை தாமதித்தல் மாற்றம் செய்தல், இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் அல்லது திருத்துதல் ஆகியவற்றிற்கான சகல தத்துவங்களும் வத்தளை பிரதேச சபை செயலாளருக்கே உரித்தானதாகும். அதேபோன்றே மேற்கூறப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

கே. எச். எஸ். ஜராங்கனி,
செயலாளர்,
வத்தளை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வத்தளை,
2015, யுன் 19.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வத்தளை பிரதேச சபை**

.......................................................................... பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
2. பிரத்தியேக முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
5. மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவுக்காலம் :----.
6. (அ) நீர் இலங்கை பிரசையா :----.
   (ஆ) அவ்வாறாயின், பரம்பரைமூலமாகவா? பதிவின் மூலமா? :----.
7. பால் : (ஆண்/பெண்) :----.
8. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
9. கல்வித் தகைமைகள்/சித்தியடைந்துள்ள அதியுயர் பரீட்சை :----.
10. (அ) அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள் :----.
    (ஆ) ஏனைய தகைமைகள் :----.
11. (அ) நீதிமன்றில் ஏதேனும் குற்றத்திற்காக எப்போதாவது தண்டிக்கப்பட்டவரா? :---.
    (ஆ) அவ்வாறாயின் தண்டனை பற்றிய விபரம் :----.

12. நீர் தற்போது இச்சபையில் சேவையாற்றுபவராயின் சேவைக் காலம், சேவை விபரம் மற்றும் பதவியின் தன்மை :----.
(அமயம், நிரந்தரமல்லா பதிலீடு, ஒப்பந்த அடிப்படையில், செயற்றிட்ட அடிப்படையில்)

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதியுரைக்கிறேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது அல்லது பிழையானதென நிரூபிக்கப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னராயின் தகைமையற்றவனாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நஷ்டஈடுமின்றி பதவி நீக்கத்திற்கு ஆட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

**தற்போது அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்காக நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரி, திரு./ திருமதி ............................................ திகதி முதல் ............. திகதி வரை தற்போது இத்திணைக்களத்தில்/ இந்நிறுவனத்தில் ........................... ஆக ......................... ஆந் திகதியிலிருந்து .......................... ஆந் திகதி வரை சேவையாற்றுகிறார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுபடுத்துகிறேன்.

---------------------,
நிறுவன தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை இடவும்)

திகதி :----.

7-522

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கடுவெல மாநகர சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துறைக்கு பொறுப்பான அமைச்சருமானவரால் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி “சிசில உயன” என பெயரிடப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

ஜீ. லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

| | |
|---|---|
| 1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : கடுவெல மாநகர சபை |
| 2. மாவட்டம் | : கொழும்பு |
| 3. கிராம அலுவலர் பிரிவு | : 477 சீ - பொத்துஅராவ |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : இல்லை |
| 5. புதிதாக இடப்பட்ட பெயர் | : சிசில உயன |
| 6. வீதியின் விபரம் | : |

(i) **வீதியின் தொடக்கம்:-**
இடது பக்கம் : பொத்துஅராவ வீதியின் வலதுபக்கத்தில் 45 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பொத்துஅராவ வீதியின் வலதுபக்கத்தில் 43 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு :-**
இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 43/8 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 43/18 ஆம் இலக்கமுடைய ஆதனம்

7-333/1

---

**கடுவெல மாநகர சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துறைக்கு பொறுப்பான அமைச்சருமானவரால் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "றைகம மாவத்தை" என பெயரிடப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

ஜீ. லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 488 - கொரதொட்ட
4. வீதியின் தற்போதைய பெயர் : இல்லை
5. புதிதாக இடப்பட்ட பெயர் : றைகம மாவத்தை
6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்:-**
இடது பக்கம் : எம். டீ. எச். ஜயவர்தன மாவத்தையின் வலதுபக்கத்தில் 582 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : எம். டீ. எச். ஜயவர்தன மாவத்தையின் வலதுபக்கத்தில் 578 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு:-**
இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 578/22 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 578/23 மற்றும் 578/25 ஆம் இலக்க ஆதனம்.

7-333/2

---

**கடுவெல மாநகர சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துறைக்கு பொறுப்பான அமைச்சருமானவரால் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "கிரிபத்கலவத்த வீதி" என பெயரிடப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

ஜீ. லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 476 மாலபே கிழக்கு
4. வீதியின் தற்போதைய பெயர் : கிரிபத்கலவத்த
5. புதிதாக இடப்பட்ட பெயர் : கிரிபத்கலவத்த வீதி (இவ்வீதிக்கான பெயரிடல் இதற்கு முன்னர் சட்டபூர்வமாக்கப்படவில்லை)
6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்:-**
இடது பக்கம் : கடுவெல மாலபே வீதியின் இடதுபக்கத்தில் 295 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : கடுவெல மாலபே வீதியின் இடதுபக்கத்தில் 297 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு :-**
இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் இடதுபக்கத்தில் 93 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் இடதுபக்கத்தில் 92 ஆம் இலக்க ஆதனம்.

7-333/3

---

**கடுவெல மாநகர சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயத்துறைக்கு பொறுப்பான அமைச்சருமானவரால் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "சபுமல் ப்ளேஸ்" என பெயரிடப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

ஜீ. லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 477 சீ - பொத்துஅராவ
4. வீதியின் தற்போதைய பெயர் : இல்லை
5. புதிதாக இடப்பட்ட பெயர் : சபுமல் பிளேஸ்
6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்:-**
இடது பக்கம் : பொத்துஅராவ வீதியின் 52/ஏ ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பொத்துஅராவ வீதியின் 50 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு :-**
இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 54/2 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 50/10 ஆம் இலக்கமுடைய ஆதனம்

7-333/4

**நீர்கொழும்பு மாநகர சபை**

*2015 ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பி வரவு செலவுத் திட்டம் இல. 02*

*நீர்கொழும்பு மாநகர சபையின் 2015.07.02 ஆந் திகதி நடைபெறவிருக்கும் மாநகர பொதுக் கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டிற்கான 2 ஆவது குறைநிரப்பி வரவு செலவுத் திட்டப் பேரேடு பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படவிருப்பதால், அவ்வேடு 2015.06.26 ஆந் திகதியில் இருந்து ஏழு (07) நாட்களுக்கு நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில் பொது மக்கள் பரிசீலனைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 214(பீ) பிரிவின்கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.*

*அன்டனி ஜயவீர,*
*மாநகர முதல்வர,*
*நீர்கொழும்பு மாநகர சபை.*

*7-484*

---

# நானாவித அறிவித்தல்கள்

**மண்முனை தென்மேற்கு பிரதேச சபை**

*ஆலய உற்சவங்களில் வரி விதித்தல் - 2015*

*மண்முனை தென்மேற்கு பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 9 ஆந் திகதிய சபை தீர்மானம் இலக்கம் 81 இன் கீழ் பின்வரும் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*2015 ஆம் ஆண்டிற்கு விதிக்கப்பட்ட அந்த வரியை ஆலய உற்சவ காலத்தின் போது ஆலய நிர்வாகத்தினால் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான இடம் வழங்கப்பட்டதும் குறித்த வரியை உடன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென்றும் மேலும் அறியத்தரப்படுகின்றது.*

*ந. கிருஷ்ணபிள்ளை,*
*செயலாளர்,*
*மண்முனை தென்மேற்கு பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*மண்முனை தென்மேற்கு,*
*கொக்கட்டிச்சோலை,*
*2015, யூன் 10.*

**தீர்மானம்**

*"1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு குறித்த சட்டத்தின் அல்லது பிரதேச சபை தீர்மானத்தின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் ஆலய உற்சவங்களின் போது ஆலய நிர்வாகத்தினால் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான இடம் வழங்கப்பட்டதும் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டண விபரங்களுக்கு அமைவாக குறித்த வரியை மண்முனை தென்மேற்கு பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென்று மண்முனை தென்மேற்கு பிரதேச சபை தீர்மானிக்கின்றது."*

**அட்டவணை**

| | வியாபாரத்தின் தன்மை | கட்டணம் ரூபா ச. |
|---|---|---|
| 1. | சாப்பாட்டுக்கடை | 500 0 |
| 2. | தேநீர் கடை | 300 0 |
| 3. | தேநீர் சாப்பாட்டுக்கடை | 500 0 |
| 4. | ஐஸ்கிறீம் விற்பனை | 500 0 |
| 5. | பழக்கடை (10' க்கு) | 200 0 |
| 6. | அலுமினியத் தயாரிப்புகள் (10' க்கு) | 300 0 |
| 7. | விளையாட்டுப் பொருட்கள் (10' க்கு) | 300 0 |
| 8. | குளிர்பானக் கடை | 500 0 |
| 9. | இனிப்புப் பண்டங்கள் (பெரியது) | 500 0 |
| 10. | இனிப்புப் பண்டங்கள் (சிறியது) | 400 0 |
| 11. | பாய்கள் விற்பனை | 100 0 |
| 12. | சாப்புச் சாமான்கள் (10' க்கு) | 200 0 |
| 13. | மின்சாதனப் பொருட்கள் (10' க்கு) | 200 0 |
| 14. | ஐஸ்பழம் (துவிச்சக்கர வண்டி) | 100 0 |
| 15. | ஐஸ்கிறீம் வாகனம் | 500 0 |
| 16. | பலூன் வியாபாரம் | 100 0 |
| 17. | படக்கடை (10' க்கு) | 200 0 |
| 18. | காப்புக் கடைகள் (10' க்கு) | 200 0 |
| 19. | புடவை வியாபாரம் (10' க்கு) | 200 0 |
| 20. | விறகு வியாபாரம் | 100 0 |
| 21. | மரக்கறி வியாபாரம் | 100 0 |
| 22. | சட்டி பானை வியாபாரம் (10' க்கு) | 200 0 |
| 23. | கரும்பு வியாபாரம் | 100 0 |
| 24. | கடையப்ப வியாபாரம் | 100 0 |
| 25. | கைப்பணிப் பொருட்கள் (பிரம்பு) (10' க்கு) | 200 0 |
| 26. | கைப்பணிப் பொருட்கள் (களி) (10' க்கு) | 200 0 |
| 27. | தேங்காய் வியாபாரம் | 200 0 |
| 28. | ஏனையவை (10' க்கு) | 100 0 |

7-309

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.